2011 செப்டம்பர் 5]

அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு விலக்களித்தது குறித்தும்; (iii) யாதொரு வணிகர், மத்திய காவல் படை போன்று இம்மாநிலத்தில் ஏற்படுத்தப்படவுள்ள மாநில காவல் படை கேண்டீனுக்கு அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு விற்பனை செய்யும் யாதொரு பொருட்களின் (பெட்ரோல், டீசல், சிமெண்ட், மது, ஆல்கஹால் கலந்த பானங்கள் ஆகியவை நீங்கலாக) மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்தும்; மற்றும் (iv) இம்மாநிலத்தில், மாநில காவல் துறை பணியாளர்களுக்கும், ஓய்வுபெற்றவர்களுக்கும் ஏற்படுத்தப்படவுள்ள மாநில காவல் படை கேண்டீனுக்கு செலுத்தத்தக்க வரியிலிருந்து அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு விலக்களித்தது குறித்தும் வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் *28–2–2011* ஆம் நாளிட்ட *38* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [*2006* ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *32/2006*) *86 (2)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

38. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஜெ1) துறையின் *29–6–2011* ஆம் நாளிட்ட *54* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1983* ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *30/1983*) *180(5)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

89. மானியக் கோரிக்கை எண் *4*–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2011–2012*. (தமிழ், ஆங்கிலம்)

90. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 'மக்கள் சாசனம்'. (தமிழ், ஆங்கிலம்)

91. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய வரவு–செலவு செயலாக்கத் திட்டம், *2011–2012*. (தமிழ், ஆங்கிலம்)

[2011 செப்டம்பர் 5

92. வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2011–2012. (தமிழ்)

93. வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) மற்றும் முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2011–2012. (தமிழ்)

94. சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு அமைச்சர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2011–2012. (தமிழ்)

95. செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) மற்றும் எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள், 2011–2012. (தமிழ்)

96. இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள், 2011–2012. (தமிழ்)

———